[1987 மார்ச் 26

கொடைக்கானலில் வாழை மரங்களுக்கு வேர் முடிக் கொத்து நோய்.

188—(* வினா எண் 10551) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் கீழ்பழனி மலைப் பகுதியில் வாழை மரங்கள் 'வேர் முடிக் கொத்து' நோயால் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்பகுதி வாழ் உழவர்களிடையே மலைவாழையில் முடிக்கொத்து நோய் தாக்கப்பட்ட மரங்களை தெரிவு செய்து செடிகளை அழித்து அப்புறப்படுத்தவும், ரோகார் அல்லது மெட்டாசிஸ்டாக்ஸ் மருந்துகளை தெளித்து இந்த நோயை பரப்பும் தத்துப்பூச்சிகளை அழித்திடவும் ஏதுவாக உரிய விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்நோய் பரவுதலை கட்டுப் படுத்த 2, 4D மருந்தை வாழை மரத்தின் அடித்தண்டு பகுதியில் ஊசி மூலம் உட்செலுத்தி தாக்குண்ட மரங்களை அழிப்பதால் நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-40)

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மலைவாழை பயிரிடும் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் அரசு ஏதேனும் நிவாரணம் அளித்து, நிதியுதவி அளித்து, மேலும் வாழை மரங்களை வளர்க்க உதவி செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நோய் சரிப்படுத்தற்கான முறையில் பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் கிராமங்களுக்குப் போய், அங்கிருக்கின்ற விவசாயிகளுக்கு உதவி செய்து, 100 மில்லி மீட்டர் மண்ணெண்ணெய் ஊற்றி பயிர்களை எரித்து விடுகிறார்கள். எனவே தற்போது நிலைமை கட்டுக்குள் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1987 மார்ச் 26]

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, மலை வாழைப் பழம் இந்த நோயினால் அடியோடு அழிந்து போகின்ற நிலையில் இருக்கிற காரணத்தால் வேளாண்மைத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை ஆங்காங்கு அனுப்பி, அவர்களுக்கு பயிற்சி அளித்து, இந்த நோயைத் தடுக்க அரசு முன் வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இதன் மூலமாக வாழை அழிந்து விடாத தன்மையில் ஒரு இலட்சம் ஏக்கர் அளவில் உற்பத்தி செய்ய, நடப்பாண்டில் திட்டமிடப்பட்டு, நோய் தாக்காத வாழைக் கன்றுகளை விவசாயிகளுக்கு விவசாய இலாக்கா தந்து கொண்டு வருகிறது.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனிலும் இனியது திகட்டாத கனியது சிறுமலை வாழை பழமே என்று சொல்வார்கள். அந்த வகையிலே சிறுமலை வாழைப்பழங்கள் எல்லாம் இந்த மாநிலம் அனைத்திலுமே முடி கொத்து நோயினால் கெட்டு, சிறிது கூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அந்த விவசாயிகள் திரும்பவும் வாழை மரங்களை பயிரிட்டு இருக்கிறார்கள். அவற்றுக்கும் இப்படிப்பட்ட மருந்து கொடுத்து, அரசு ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, பயிற்சி வழித் தொடர்பு அலுவலாளர்கள் இந்தக் கிராமங்களுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த நோயைத் தடுப்பதிலே, மேலும் பரவாமல் தடுப்பதற்கு கிராம மக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மிக எளிய தன்மையில் அந்த மருந்துகள் வழங்கப்பட்டு, 2, 4 D மருந்துகளை மரத்தின் அடித் தண்டிலே தெளித்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். 250 ஹெக்டேரில் நோய் பரவாமல் தடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முடிகொத்து நோயினால் பாதிக்கப்பட்ட இடங்களில் 3 ஆண்டுகளாக வாழைப் பயிரிடப்படவில்லை என்றால், இந்த நோய் வருவதில்லை என்று கூறப்படுகிறது. இது உண்மையா? அப்படி உண்மையானால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வாழை பயிரிடுவதற்கு மலைகளில் மாற்று இடங்கள் ஒதுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அவர்களுக்கு நோயைத் தடுப்பதற்கு சொல்லித் தருகிறோம். நோய் பரவாமல் இருக்கின்ற வகையில் தடுப்பு முறைகளைக் கையாள்கிறோம். மிக எளிதான முறையில் மருந்துகளை எல்லாம் கொண்டு போய் கொடுக்கிறோம். அத்தோடு மேலும் அடுத்த ஆண்டு ஒரு இலட்சம் ஏக்கர் அளவில் வாழை பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

விஜய மங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுக்கு நினைவுச் சின்னங்கள்.

189—(* வினா எண் 1907) டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விஜய மங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களான கார்மேகப் புலவர், பவணந்தி முனிவர், அடியார்க்கு நல்லார், கொங்கு வேளிர் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவிடவும அரசு விழா ஏதேனும் எடுக்கவும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை அருகில் உள்ள விஜய மங்களத்தில் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் திருக்கோயிலுக்கு அருகில் சமணர் முறைப்படி தூண் ஒன்று நிறுவலாம் எனும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தூணில் நான்கு பக்கங்களிலும் விஜயமங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களான கார்மேகப் புலவர், பவணந்தி முனிவர், அடியார்க்கு நல்லார், கொங்கு வேளிர் ஆகியோரைப் பற்றி எழுதலாம் என்றும் ஆண்டுதோறும் விழா எடுக்கவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சங்கச் சான்றோர்கள் பிறந்த ஊரைக் கண்டறிந்து ஆங்காங்கு சான்றோர் நினைவுக்கல் நிறுவும் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்டந்தோறும் படிப்படியாகச் செயற்படுத்தப் பெறும்.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமை பெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, அன்னை தமிழுக்கு அணி அணியாக அணி சேர்க்கும் தங்கத் தலைவர், புரட்சித் தலைவருடைய அரசு, சங்கப் புலவர்களின் நினைவை போற்றும் வண்ணம் கொங்கு